## 112. உம்மையல்லாமல் என்னால்

### பல்லவி

உம்மையல்லாமல் என்னால் ஒன்றும்
செய்ய முடியாதைய்யா – 2

### அனுபல்லவி

எந்தன் வாழ்வின் காரியங்களை
நீர் ஒருவரே முடித்திடுவீர்

### சரணங்கள்

1. சாத்தானின் சோதனைகள் - என்னை
தள்ள பார்க்கின்றது
பரம தகப்பனே உம் கையினால்
என்னை உறுதியாய் பிடித்து கொள்ளும்
- உம்மையல்லாமல்

2. உலக அன்பு எல்லாம் - என்னை
இழுக்க பார்க்கின்றதே
இயேசுவே உந்தன் அன்பினால்
என்னை வலிமை ஆக்கிவிடும்
- உம்மையல்லாமல்

3. மாம்ச பெலவீனங்கள் என்னை
மேற்கொள்ள பார்க்கின்றதே
பரிசுத்த ஆவியானவரே
எனக்கு உதவி செய்திடுமே
- உம்மையல்லாமல்